MISSION PRESS 1840

# சர்வவியாபி
SARVAVIABI

07-05-2017 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | ஹேவிளம்பி வருடம் சித்திரை 17 | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 111 பக்கம் - 12 | இதழ் 17 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச்

## கெய்ரோ திருப்பலியில் திருத்தந்தை வழங்கிய மறையுரை



அன்பு சகோதர, சகோதரிகளே! As-salamu alaykum! சமாதானம் உங்களோடு இருப்பதாக! உயிர்ப்பு காலம் 3ம் ஞாயிறன்று வழங்கப்பட்டுள்ள நற்செய்தி, இரு சீடர்கள் எம்மாவு சென்ற பயணத்தைப் பற்றி பேசுகிறது. இந்த நிகழ்வை, மரணம், உயிர்ப்பு, வாழ்வு என்ற மூன்று வார்த்தகளில் சுருக்கிக் கூற முடியும். **மரணம்** இவ்விரு சீடர்களும் ஏமாற்றத்தோடும் விரக்தியோடும் திரும்பிக் கொண்டிருந்தனர். இயேசுவின் சிலுவை மரணத்தால் வந்த வேதனை தந்த ஏமாற்றம் அது. அவரை நம்பி அவர்கள் வளர்த்துக்கொண்ட நம்பிக்கை அனைத்தும் இப்போது புதைக்கப்பட்டுவிட்டன. இறந்தோரை உயிர்ப்பித்த, நோயுற்றோரைக் குணமாக்கிய தங்கள் தலைவன், சிலுவையில் அவமானப்பட்டு இறந்ததை அவர்களால் நம்பமுடியவில்லை. அனைத்தும் வல்ல இறைவன் அவரை ஏன் காப்பாற்றவில்லை என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. கிறிஸ்துவின் சிலுவை, கடவுளை பற்றி அவர்கள் கொண்டிருந்த எண்ணத்தின் சிலுவை; கிறிஸ்துவின் மரணம், கடவுளைப்பற்றி அவர்கள் கொண்டிருந்த எண்ணங் களின் மரணம். அவர்களது குறுகிய எண்ணங்கள், அவர்களைக் கொன்று புதைத்துவிட்டன.

நாம் எத்தனை முறை இவ்வாறு சிந்தித்து, நம்மையே செயலற்று போகச் செய்துள்ளோம்! கடவுளின் சர்வ வல்லமை, சக்தியும் அதிகாரமும் கொண்டதல்ல, மாறாக, அன்பு, மன்னிப்பு, வாழ்வு இவற்றின் வழியே வெளிப்படுவதே அவரது வல்லமை என்பதை நம்ப மறுத்து, எத்தனை முறை நாம் விரக்தி அடைந்துள்ளோம். 'அப்பத்தை உடைக்கும்போது' அவர்கள் இயேசுவை அடையாளம் கண்டனர். நமது உள்ளங்களை நிறைத்திருக்கும் முற்சார்பு எண்ணங்களை, நமது கடின உள்ளங்களை உடைக்காவிடில், கடவுளின் முகத்தை நம்மால் கண்டுகொள்ள முடியாது.

**உயிர்ப்பு.** அவ்விரு சீடர்களும் இருளில் மூழ்கியிருந்தபோது, இயேசு அவர்களை அணுகி, அவர்களுடன் நடந்தார். தானே 'வழியும், உண்மையும், வாழ்வும்' (யோவான்.14:6) என்பதை அவர்கள் உணரச் செய்தார். மனித நம்பிக்கை மறையும்போது, அங்கு இறை நம்பிக்கை ஒளிர்வதுபோல், சீடர்களின் விரக்தியை, வாழ்வாக மாற்றுகிறார், இயேசு. தோல்வியடைந்து, நம்பிக்கையிழந்து, மிகக் கீழான நிலையை நாம் அடையும் போது, நாமே இவ்வுலகின் மையம், நமக்கு நாம் மட்டுமே போதும் என்ற மாயையை நாம் களையும்போது, இறைவன் நம் மரணத்தை உயிர்ப்பாக மாற்றுகிறார். திருநூல், சட்டம், இறைவாக்கினர் அனைவரும் கூறியவை நிறைவேறின என்பதை அவ்விரு சீடர்களுக்கும் இயேசு புரியவைத்தார். நம்பிக்கை யின்மை என்ற கல்லறையிலிருந்து அவர்களை இயேசு உயிர்ப்பித்து, மீண்டும் எருசலேமுக்கு அனுப்பி வைத்தார்.

**வாழ்வு.** உயிர்த்த இயேசுவைச் சந்தித்த சீடர்களின் வாழ்வு முற்றிலும் மாறியது. அவ்வாறே நம் வாழ்வும், பலன் தரும் வகையில் மாறும். தன்னை அடையாளம் காட்டியதும், இயேசு அவர்களிடமிருந்து மறைந்தார். வரலாற்றில் உயிர்பெற்று, உடலுடன் தோன்றிய இயேசுவை, நாம் பற்றிக்கொண்டிருக்க முடியாது என்பதைச் சொல்லித்தர இயேசு அங்கிருந்து மறைந்தார். அந்த அனுபவத்திற்குப் பின், அவர்களின் உள்ளம், இறைவனால் நிறைந்தது.

நம் உள்ளங்கள் இறைவனால் நிறையாதபோது, நம் வழிபாட்டுத் தலங்களை நிரப்புவது பயனற்றது என்பதை, எம்மாவு சென்ற சீடர்கள் நமக்குச் சொல்லித் தருகின்றனர்.நம் மத உணர்வுகள், நம்பிக்கையாலும், பிறரன்பாலும் நிறையவில்லை எனில், அவை பயனற்றவை.

நம் நம்பிக்கை, பிறரன்பிலும், இரக்கத்திலும் நம்மை வளர்க்கவேண்டும். அயலவரை மன்னிப்பதற்கும், தேவையில் இருப்போருக்கு உதவிகள் செய்வதற்கும் நம் நம்பிக்கை நம்மை உந்தித்தள்ள வேண்டும் (காண்க.மத்.25).நம் உரிமைகளைக் காப்பதற்கு நாம் காட்டும் அதே ஆர்வத்துடன் அடுத்தவர் உரிமைகளைக் காப்பதற்கு நம் நம்பிக்கை நம்மை அழைக்கிறது.

அன்பு சகோதர, சகோதரிகளே, நம் வாழ்வின் வழியே பறைசாற்றப்படும் நம்பிக்கையே, இறைவனை மகிழ்விக்கும். நம்மிடம் வெளிப்படும் தீவிரப் பற்று, பிறரன்பில் நாம் காட்டும் தீவிரப் பற்றாக இருக்க வேண்டும். வேறுவகை தீவிரப் பற்றுகள் இறைவனிடமிருந்து வருவன அல்ல.

மகிழ்வாலும், நம்பிக்கையாலும் நிறைந்த எம்மாவு சீடர்கள், எருசலேமுக்குத் திரும்பியதைப் போல, நீங்களும், உங்கள் குடும்பங்கள், பணி இடங்கள், உங்கள் அன்பு நாடு ஆகியவை அடங்கிய உங்கள் தினசரி வாழ்வுக்குத் திரும்பிச்செல்லுங்கள். உயிர்த்த இறைவனை, உங்கள் அன்பின் வழியே அயலாருக்கு எடுத்துச் சொல்லுங்கள். அவர்கள் வாழ்வை மாற்றுங்கள்.

அன்னை மரியாவும், இந்த பூமியில் சில காலம் வாழ்ந்த திருக்குடும்பமும் உங்கள் உள்ளங்களுக்கு அளிவொளி தந்து, உங்களை ஆசீர்வதிக்கட்டும்! புனித மாற்று வழியே, கிறிஸ்துவுக்கு அறிமுகமான இந்நாட்டை, இறைவன் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

ஆசிரியர் பேனா...

# நாம் எத்துணை பேறு பெற்றவர்கள்! ③

சென்ற இதழ் தொடர்ச்சி..

**திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட்:**

அவர் வத்திக்கானில் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக விசுவாச பேராயத்தின் தலைவராக பணியாற்றியபோதும், இந்த இறை இரக்கம் மிகு வழிகாட்டலை உணர்ந்திருந்தார். இறையியலில் அவரது பங்களிப்பு மிகுதியாகும். ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் ஒரு தலைசிறந்த இறையியலராக பரிணமித்தார். அவரது எண்ணற்ற நூல்கள் கத்தோலிக்க கிறிஸ்தவ விசுவாச படிப்பினைகளை உயர்த்திப் பிடித்தன, உறுதிப்படுத்தின. இத்தகைய மாமனிதர் இறை விருப்பத்தினாலும் தூய ஆவியின் தூண்டுதலாலும், இறையடி சேர்ந்த திருத்தந்தை 2-ஆம் ஜான்பால் அவர்களுக்குப் பின் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டது வியப்பில்லை. இறை இரக்கத்திற்கு, திருத்தந்தை 2-ஆம் ஜான்பால் அவர்களுக்குப்பின் மிகுந்த அழுத்தம் அளித்தவர் அவர். இறைஇரக்கத்தின் திருத்தந்தை (Pope of Divine Mercy) என்று நினைவு கூரப்படுகிறார்.

திருத்தந்தை 16-ஆவது பெனடிக்ட் அவர்கள் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, 20-4-2005 அன்று அவர் ஆற்றிய முதல் உரையிலேயே "இத்தருணத்தில் என் உள்ளத்தில் இரு எதிர்மறையான உணர்வுகள் தோன்றுகின்றன. ஒன்று எனது தகுதியின்மையும் மனித பலவீனங்களும், மற்றொன்று வரலாறுதோறும் தன் மந்தையை வழிநடத்தும் இரக்கமிகு இறைவன் தான் விரும்பியவர்களை தேர்ந்தெடுத்து வழிநடத்துகிறார் என்ற அளவு கடந்த நன்றி உணர்வு. அன்பு நண்பர்களே, **இறைவனின் இரக்கம் என்னும் மாபெரும்கொடைக்கு** நான் இதயபூர்வமான நன்றி சொல்கிறேன்.

வணக்கத்திற்குரிய திருத்தந்தை 2-ஆம் ஜான்பால் அவர்கள் எனக்கு பெற்றுத் தந்த தனிப்பட்ட அருளாக அதை நான் கருதுகிறேன். அவரது வலிமைமிகு கரங்கள் என் கரங்களைப் பிடித்து உறுதியூட்டுவதாக உணர்கிறேன்; "அஞ்சாதீர்" என அவர் புன்னகை தவழும் முகத்துடன் தோன்றி எனக்கு சொல்வதாக உணர்கிறேன்" என்றார். (20-4-2005- திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களின் முதல் உரையிலிருந்து).

23-4-2006 - இறைஇரக்கத்தின் ஞாயிறு நண்பகல் உரையில் "இறை ஊழியர் இரண்டாம் ஜான்பால் அவர்கள், உயிர்ப்பின் ஞாயிறுக்கு அடுத்து ஞாயிறு இறை இரக்கத்தின் ஞாயிறாக சிறப்பிக்கும்படி அர்ப்பணித்தார்; இறை இரக்க ஞாயிறின் திருவிழிப்பு தருணத்தில் இரக்கம்மிகு இறைவனின் திருக்கரங்களில் அவர் துயில் கொண்டார். இறைவனின் இரக்கம் மிகு அன்பே அவரது இராயத்துவ பணியின் மையமாயிருந்தது. 1978 ல் அவர் தந்த (Dives in misericordia) "இரக்கத்தில் செல்வந்தரான இறைவன்" என்னும் சுற்று மடலும், 2002 இல் க்ராக்கோ நகரில் இறை இரக்கத்தின் திருத்தலம் அர்ப்பணித்ததும் இங்கு நினைவு கூரத்தக்கது. அத்தருணத்தில் அவர் ஆற்றிய உரை அவரது போதனையின் சுருக்கமாக அமைந்தது, இறைஇரக்க பக்தி, கிறிஸ்தவ விசுவாசம் மற்றும் செப வாழ்வின் கருப்பொருளாக அமைந்தது என்று விவரித்தார்.

27.5.2006-இல் க்ராக்கோ நகரின் லஜியுனிக்கியில் அமைந்துள்ள இறைஇரக்கத்தின் திருத்தலத்திற்கு அவர் திருப்பயணம் மேற்கொண்டபோது, அங்கு குழுமியிருந்த நோயுற்றோருக்கு ஆற்றிய உரையில் - "இத்தருணத்தில் இரு மறையுண்மைகள் நம்முன் நிழலாடுகின்றன - ஒன்று மனிதனின் துன்பங்கள், மற்றொன்று இறை இரக்கம். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரானவையாகத் தோன்றும். ஆனால் விசுவாசக் கண்கொண்டு நோக்கும்போது, அவை கிறிஸ்துவின் சிலுவையின் மறை பொருளால் ஒன்றுக்



கொன்று இணைந்து செல்வதைக் காண இயலும். திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் அவர்கள் சொல்வது போல, "திருச் சிலுவை இறைவனை மனிதனுக்கு மிக அருகில் கொணர்கிறது, மனித இனத்தின் காயங்களின் மேல் இறை வனின் நித்திய அன்பின் தொடுதலாக அது இருக்கிறது. (17.8.2002) எனவே, நீங்கள்துன்புறும் போது கிறிஸ்துவின் சிலுவையுடன் ஒன்றித்து இருக்கிறீர்கள், இறை இரக்கத்தின் சாட்சிகளாகத் திகழ்கிறீர்கள். "**இயேசுவே உம்மை நான் நம்புகிறேன்**" என்று நீங்கள் சொல்லும்போதெல்லாம் இதைவிட மேலான விசுவாசம், இதைவிட உறுதியான நம்பிக்கை, இதைவிட ஆழமான அன்பு வேறில்லை என்று அறிக்கையிடுகிறீர்கள், இறைவனின் கரத்திலேயே உங்களை வைத்துவிடுகிறீர்கள்" - இவ்வாறு கூறினார். இறைஇரக்கத்தில் கடவுளுக்கும் மனிதனுக்கும் நடைபெறும் ஆழமான உறவுப் பரிமாற்றத்தை இங்கு விளக்குகிறார். இந்நிகழ்வுக்குப்பின் 31.5.2006ல், திருப்பயணிகளுக்கு வத்திக்கானில் அவர் வழங்கிய மறையுரையில், லஜினிக்கி இறைஇரக்கத்தின் திருத்தலத்தில் அவர் பெற்ற இறை அனுபவத்தையும், அருட்சகோதரி பவுஸ்தீனா வழியாக இரக்கத்தின் ஆண்டவர் வழங்கிய செய்தியையும், புனித ஜான்பால் இறைஇரக்கப் பக்தியை உலகெங்கும் எதிரொலிக்கச் செய்ததையும் வலியுறுத்திப் பேசினார்; **இரக்கம் இறைவனின் வல்லமை, அதுவே உலகின் தீமை களுக்கு எதிராக ஒரு எல்லையிட்டு அடக்குகிறது என்று முழங்கினார்.**

திருத்தந்தை 16-ஆவது பெனடிக்ட் அவர்கள் எழுதிய "நசரேத்தூர் இயேசு" (துநளரள டிக சூயணயசநவா) என்னும் நூலில், நல்ல சமாரியத்தன் உவமையை விவரிக்கும்போது, நாம் ஒவ்வொருவரும் தேவையில் இருக்கும் அடுத்தவருக்கு உதவ நல்ல சமாரியர்களாக மாறவேண்டும் என்று வலியுறுத்துகிறார். திருத்தந்தையின் வாழ்வும், வழிபாடும், போதனைகளும், அறிவாற்றலும் இறைனின் இரக்கத்தையே, புனித திருத்தந்தை 2-ம் ஜான்பால் அவர்களின் பாதச்சுவடுகளில், மையம் கொண்டருந்தது.

15-4-2007 இறை இரக்க ஞாயிறன்று அவர் வழங்கிய மறையுரையில், நமது ஆண்டவர் தம் காயங்களுடனே நித்தியத்திற்குள் நுழைந்துவிட்டார். எனவே அவர் ஒரு காயப்பட்ட கடவுள் எனலாம். நம்மீது அவர் கொண்ட அன்பினால் தாம் காயப்படுவதற்கு தன்னையே கையளித்தார். அவரது காயங்களே இதன் அடையாளம். நாம் வாழும் இந்நாட்களிலும் அவர் பலவாறு காயப்படுகிறார். நமது பாவங்களினாயே காயப்படுகிறார். இருப்பினும் அவரது அளவற்ற இரக்கம் நம்மை முழுமையாக மன்னித்து ஏற்றுக் கொள்கிறது. அவர் நமக்காக காயப்பட்டதுபோல, நாம் அவருக்காக காயப்பட தயார் நிலையில் இருக்க வேண்டும்.

16.9.2007 இல் அவர் வழங்கிய நண்பகல் உரையில் இன்றைய உலகில் நாம் இறை இரக்கத்தைக் குறித்து மிக உறுதியாக அறிவிக்க வேண்டும், திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் அவர்கள் இறை இரக்கத்தின் தூதுவராகவும், சாட்சியாகவும் திகழ்ந்தார்; இரக்கத்தை தனது மையமாக்கினார்; மூன்றாம் ஆயிரமாம் ஆண்டின் வைகரையே இருவர் கவர்ந்ததாக 11.9.2001 தீவிரவாத தாக்குதல் நிகழ்வுகள் நம்மை அதிரவைத்த வேளையில், அனைத்து தீமைகளையும்விட, கடவுளின் இரக்கம் மிகவும் பலம் வாய்ந்தது, கிறிஸ்துவின் சிலுவையில்தான் உலகின் மீட்பு கிடைத்தது என்று அவர் தெளிவுபடுத்தினார்.

தொடரும்...

வாரச் சிந்தனை

பாஸ்கா காலம் 5-ம் ஞாயிறு (14-05-2017)

திப.6:1-7 1பேதுரு. 2:4-9; யோவான்.14:1-12

# வழியும், உண்மையும், வாழ்வும் இயேசுதான்

அருள்திரு. D. அலெக்சாண்டர்,
உதவி பங்குதந்தை, இறையூர்.

**பா**ஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு இயேசுவுக்கும் தந்தைக்கும் உள்ள உறவை தெளிவாக நமக்கு உணர்த்து கிறது. தந்தையும் மகனும் ஒன்றாய் இருக்கிறார்கள். அதுபோல இயேசுவும் நாமும் ஒன்றாயிருக்க வேண்டும். இயேசுவில் ஒன்றிக்கும் போது நாம் அவராகவே மாற முடியும். இயேசுவை கைது செய்யப் போகிறார்கள் என்றுணர்ந்த சீடர்களின் கலக்கத்தையும் கவலையையும் போக்குவதாக இயேசுவின் வார்த்தைகள் அமைந்துள்ளன.

**நம்பிக்கை கொள்ள வேண்டும்:** இன்றைய நற்செய்தியில் வாட்டமாய் இருக்கும் சீடர்களை பார்த்து இயேசு உள்ளம் கலங்க வேண்டாம் என்று திடப்படுத்துகிறார். இயேசுவின் இவ்வார்த்தைகள் அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் தருவதாக அமைந்துள்ளன. "கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள்" என்ற இயேசுவின் வார்த்தைகள் தந்தையின் மீதும் இயேசுவின் மீதும் முழுமையான நம்பிக்கையை வைக்கவேண்டும் என்று உணர்த்துகின்றன. தந்தை இறைவனையும் அவர் மகன் இயேசுவையும் உறுதியாக நம்புவோருக்கு கலக்கம் இல்லை, துன்பம் இல்லை என்று அறிவுறுத்துகிறார். என்னை நம்புங்கள் என்ற இயேசுவின் வெளிப்படையான அறிவுரை மக்களை தன்பால் ஈர்க்க வேண்டும் என்ற அவரின் பேரன்பை வெளிப்படுத்துகிறது. மேலும் நான் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்யப் போகிறேன் என்று அவர் சொல்வதிலிருந்து மக்களின் இலக்கையும் அவர்களுக்கு அறிவுறுத்தும் நல்ல ஆயனாக அவர் உள்ளார். மேலும் நானே வழி என்ற அவருடைய மொழிகள் இயேசுவின் வழியாகவே நாம் தந்தையை அடைய முடியும் என்ற வெளிப்படையான இறைதிட்டமாக இருப்பதையும் நாம் அறிய முடிகிறது. இயேசுவை நம்பினால் வேறு எதை பற்றியும் நாம் கவலைப்பட வேண்டாம்.

**இயேசுவே வழி:** இயேசுவை விட்டால் நமக்கு வேறு வழியில்லை. நமக்கு ஏற்படும் இடர்பாடுகளில் அவரை தவிர வேறு வழியில்லை என்ற நிலைப்பாடு நம்மில் வந்துவிட்டால் அவர் மீது அசையாத நம்பிக்கை வந்துவிட்டால் நம் வாழ்வு நிச்சயமாக ஒளிமயமாகும்.

இயேசுவை பின்பற்றுவது என்பது, இயேசு காட்டும் வழியில் செல்வது ஆகும். அவர் ஒருவரை தவிர வேறு எந்த வழியையும் நாடாமல் நாம் வாழ வேண்டும். ஏனென்றால் அவர் ஒருவர் மட்டும்தான் வழியாகவும் வாழ்வாகவும், ஒளியாகவும் இருக்கின்றார்.

இயேசுவே வழியாக இருக்கின்றார். அதோடு அந்த வழி சென்றடையும் இலக்காகவும் அவரே இருக்கின்றார். அந்த இலக்கு என்ன என்றால் பரம தந்தையிடம் மக்களை இட்டுச் செல்வதே. ஆக இயேசுவின் வார்த்தைகளை ஏற்று அவர் காட்டும் வழியில் செல்லும் போது நாம் நிலை வாழ்வை பெற முடியும்.

**இயேசுவே உண்மையும், வாழ்வும்:** கடவுள் உண்மை யானவர். அவ்வுண்மையை அடையும் வழியாக இயேசு இருக்கிறார். இயேசு மனுவுரு எடுத்ததன் மூலமாக கடவுளையும் மானிடரையும் இணைக்கும் பாலமாக அவர் செயலாற்றுகிறார். ஆக கடவுளை அடைய அவரே வழியாக உள்ளார். உண்மையான கடவுளாகவும், வாழ்வளிக்கும் இறைவனாகவும் இருக்கின்ற தந்தை இறைவனிடம் நம்மை இட்டுச் செல்கிறார். அதோடு மட்டுமல்லாமல் அவர் தந்தையிடம் இருந்து வந்தவர் என்பதையும் அவர் வெளிப்படையாக சொல்கிறார். என்னை அறிபவன். ஏனென்றால் அவர் தந்தையிடமிருந்து வந்தவர், தந்தையை அறிந்தவர் ஆக இயேசுவை நாம் அறிகின்றபோது தந்தையை அறியமுடியும். உண்மையும் வாழ்வுமான இறைவனை நாம் நிறைவாக அடைய முடியும்.

**கடவுளை இயேசுவில் காண்போம்:** இயேசு பிலிப்பிடம் கூறுகிற வார்த்தைகள் நமக்கு உண்மை கடவுளை நமக்குச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது. "என்னைக் காண்கிறவன் தந்தையை காண்கிறான்" (யோவான்.14:9) தந்தை இறைவனை நாம் கண்களால் காணும் வடிவாக இயேசு இருக்கிறார். இயேசுவை பார்க்கும் போது, நாம் தந்தையையே பார்க்கிறோம். அதுபோல இயேசுவை அறிந்து கொள்வதன் மூலமாக நாம் தந்தை இறைவனை அறிந்துகொள்ள முடியும். ஆக இயேசுவோடு நாம் பேசும்போது கடவுளோடு பேசுகிறோம். இயேசுவை அன்பு செய்யும்போது கடவுளையே நாம் அன்பு செய்கிறோம். இயேசு நம்மை தொடும்போது கடவுளே நம்மைத் தொடுகிறார். இயேசு நம்மை குணமாக்கும் போது கடவுளே நம்மை குணமாக்குகிறார். இதை நாம் அறிந்துவிட்டால் இயேசுவின் வழியாக நாம் அறிந்து விட்டால் இயேசுவின் வழியாக நாம் கடவுளை அடைவது எளிதாக அமையும்.

**நம்பினால் பெரியன செய்வார் இயேசு:** இயேசு இறைமகன் என்பதை நாம் அவரது வார்த்தைகளைவிட செயல்களின் மூலமாக நாம் அறிந்து கொள்ள முடியும். அவரின் அன்புச் செயல்கள், அவரது தாழ்ச்சி, அவரது பொறுமை, அவரது சாந்தம், அவரது ஞானம் என்று ஏராளமான கடவுள் பண்புகள் அவரிடம் வெளிப்படுவதை நாம் அறிந்துகொண்டு அதையே நம்பும் போது இயேசு பல நல்லவற்றை நமக்கு செய்வார். இன்னும் பெரியவற்றையும் நமக்கு செய்வார். எனவே இயேசு ஒருவரை மட்டும் நம்புவோம். அவர் தரும் மகிழ்வை சுவைப்போம். ●

**மிஷன் அச்சகத்தில் கிடைக்கும்**

| | | |
|---|---|---|
| 1) | வியாகுல பிரசங்கம் - | ரூ. 50.00 |
| 2) | சேசுநாதருடைய திரு இருதய வணக்கமாதம் | ரூ. 100.00 |

தபால் செலவு தனி.



**Sr.Mary Rajam**

**மண்ணில்: 15-09-1950**

**விண்ணில்: 05-04-2017**

## விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு அஞ்சலி

பொன்னை உலையிலிட்டுப் புடமிடுவது போல அவர் அவர்களைப் புடமிட்டார். எரிபலிபோல் அவர்களை ஏற்றுக்கொண்டார். – சா.ஞா.3:6

இவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக 5–5–2017 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு அரியாங்குப்பம், விசிட்டேஷன் இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும். இவரது ஆன்ம சாந்திக்காக ஜெபிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**பிரிவால் வருந்தும்
உறவினர்கள்
குடும்பத்தினர்.**
எகால் (மையனூர் பங்கு)



## நசரேத்தூர் மரியா (15)

Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

**மெ**சியா பிறந்த நற்செய்தி ஏழைகளுக்கு அறிவிக்கப்பட்டது. பிறந்திருப்பவர் **மீட்பரும் மெசியாவும் ஆண்டவரும்** ஆவார்.

1. மீட்பர்: இது கடவுளுக்கு மட்டும் உரியது
2. மெசியா: இது தாவீதுக்கு அறிவிக்கப்பட்ட அவரது வழித்தோன்றல்
3. ஆண்டவர்: இது கடவுளுக்குக் கொடுக்கப்படும் மேலான அடைமொழி

“என் ஆண்டவரின் தாய்” என்று எலிசபெத்து குறிப்பிட்டார். இடையர்கள் சொன்னதை மரியா தினமும் தியானித்து வந்தார்.

**விருத்தசேதனம்:** எட்டாம் நாள் சூசையும் மரியாவும் குழந்தை இயேசுவைத் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்கின்றனர். அவர் மோசே சட்டத்துக்கு உட்படுகிறார். குழந்தைக்கு விருத்த சேதனத்தில் ஏற்பட்ட சிறு துன்பத்தையும் தாய் மரியா பொறுத்திருக்க மாட்டார். இது குடும்பத்தின் ஒரு விழா மட்டுமல்ல, மக்களின் பொது விழா. இந்தச் சடங்கு மூலம் இயேசு இஸ்ராயலில் ஆண் மக்களுக்குக் குறிக்கப்பட்ட குருத்துவத்தில் நுழைகிறார். ஆனால் சக்காரியாவைப் போல தேவாலயக் குருத்துவப் பணியை ஒருபோதும் நிறைவேற்றவில்லை. தன்னையே சிலுவையில் பலியாக்கிய ஒரே பலியை மட்டும் நிறைவேற்றினார்.

மரியா சிறிது சிறிதாக இயேசு உண்மையான மனிதன், உண்மையான கடவுள் என்பதைப் புரிந்துகொண்டார்.

**இயேசுவின் குழந்தைப் பருவத்தில் மேலும் ஒரு முக்கிய விழா:** நற்செய்தியில் இயேசுவின் குழந்தைப் பருவத்தில் அவர் தேவாலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பெரும் விவிலிய இறைவாக்குகள் நிறைவேறுகின்றன. இறுதிகாலத்தில் கடவுள் தன் ஆலயத்துக்கு வருதல், துன்புறும் மெசியாவின் வருகை... (எசா 53)

மரியின் மைந்தர் இறைமகன். இயேசு நாளுக்கு நாள் மனிதத்தில் வளர்கிறார். எல்லாக் குழந்தைகளைப் போலவும் மரியா தன் குழந்தையைத் தாலாட்டி, சீராட்டி, உணவூட்டி, குளிப்பாட்டி, வாய் துடைத்து, உடுத்தி, தலைவாரி மகிழ்ந்திருப்பார். பேசவும் கற்றுக் கொடுத்திருப்பார்

இயேசு பிறந்து நாற்பது நாட்கள் கடந்துவிட்டன. மரியா அதிகாலை எழுந்து நீராடித் தன்னைத் தூய்மைப் படுத்திக்கொண்டு குழந்தை இயேசுவையும் குளிப்பாட்டி, பாலூட்டி, சூசையுடன் எருசலேமுக்குப் புறப்படுகிறார். வழிப்பயணத்தில் குழந்தையை இருவரும் மாற்றி மாற்றித் தூக்கிச் செல்கிறார்கள். தேவாலயத்துக்குச் சென்று மோசேவால் கொடுக்கப்பட்டத் திருச்சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

என்ன சட்டம் அது? ஆண்மகவைப் பெற்ற இஸ்ராயல் பெண் ஒவ்வொருவரும் மகப்பேறு அடைந்த நாற்பதாம் நாள் குழந்தையைத் தேவாலயத்துக்கு எடுத்துச் சென்று கடவுளுக்குக் காணிக்கை ஆக்க வேண்டும். (லேவி 12:2-8)



மரியாவுக்கு இந்தச் சட்டம் நன்கு தெரியும். இச்சட்டத்தை நிறைவேற்றும் குரு இருக்கும் இடம் சூசைக்குத் தெரியும்.

மரியாவின் மனதுக்குள் இந்தக் கேள்வி எழுந்திருக்கலாம் “நான் எப்படித் தூய்மை அற்றவர்? ஏன் நான் இச்சட்டத்தை நிறை வேற்ற வேண்டும்?” இந்தத் தூய்மையை உறுதிப்படுத்துவதற்கு முன் எத்தனை குழப்பங்களை மரியா அனுபவித்துள்ளார்கள்? இருப்பினும் சட்டத்தை மதித்து இறைமகனும் தன் மகனுமான குழந்தையை எடுத்துச் செல்கிறார்.

சூசையும் மரியாவும் எருசலேம் தேவாலயப்படிகளை ஏறி ஏழைகளுக்குக் குறிக்கப்பட்ட இரு இளம் மாடப்புறாக்களை ஒப்புக்கொடுக்கிறார்கள்.

தேவாலயமும் குருக்களும் மக்களும் தூய்மைப் படுத்தப்படுகின்றனர். எருசலேமின் முதல் தேவாலயம் கி.மு. 587 (அ) 586-இல் தகர்க்கப்பட்டது. அதன் பின்னர் அது கட்டி எழுப்பப்பட்டு உடன்படிக்கைப் பேழை அங்கு வைக்கப் பட்டது. அங்கு மரியா தன் மகனை எடுத்துச் செல்கிறார். அன்று முதல் அது உண்மையாகவே இறைவன் உறையும் இடமாயிற்று. தன் மகன், மீட்பர், மெசியா, கிறிஸ்து, ஆண்டவர் என்பதைப் போகப் போக முப்பது ஆண்டுகளாக அறிந்து கொள்ளப் போகிறார்கள்.

மரியாவுக்குச் செய்யப்பட்டத் தூய்மைப்படுத்தும் சடங்கு என்ன என்று சொல்லப்படவில்லை.

இந்த நிகழ்ச்சியில் குரு அல்லாத வேறு ஒருவர் வருகிறார். அவர் சிமியோன். தூய ஆவியால் தூண்டப்பட்டு அங்கு வருகிறார். ஏனெனில் மீட்பரைக் காணாமல் அவர் சாகமாட்டார் என்று அவர் அவருக்கு அறிவித்திருந்தார். இவர் மக்களின் மனிதர். இன்று குழந்தையில் மெசியாவைக் கண்டார். இப்போது மெசியா அவர் கைகளில். கடவுளின் அருளை உணர்ச்சிப்பூர்வமாக அறிகிறார். கடவுள் தந்த வாக்குறுதி நிறைவேறுகிறது. சாகாமல் கடவுளைக் காண முடியாது. தன் சாவை அன்று மகிழ்ச்சியோடு காண்கிறார். எனவே தன் சாவை மகிழ்ச்சியோடு பாடுகிறார். சிமியோனுடைய வாழ்வு அதன் முடிவை நெருங்குகிறது. சாவைக் காண்பதில் அவருக்குப் பெரு மகிழ்ச்சி எனலாம். ஏனெனில் அதற்கு முன் மெசியாவைக் கண்டுவிட்டார். ஆண்டவர் எளியக் குழந்தையாக மனுவுரு எடுத்துவிட்டார். - தொடரும்

### அன்னைக்குக் கரம் குவிப்போம்-11



(முற்கால தற்காலச் செபங்கள்-

தமிழாக்கம் ச.லில்லி மரி) 07-05-2017

©Paul Claudel

அவரது இரக்கம் தலைமுறை தலைமுறை தோறும் நீடிக்கும். என் ஆன்மா ஆண்டவருக்கு மகிழ்ச்சியின் அஞ்சலியைச் செலுத்துகிறது. என் மனம் அவர் தரும் மீட்பை நினைத்து நினைத்துப் பூரிக்கிறது. ஏனெனில் அவர் தம் அடியாளின் தாழ்ச்சியின் மீது பார்வையைச் செலுத்தினார்.

எனவே எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதி என்று புகழும். அவர் என்னில் அரிய பெரிய செயல்களை ஆற்றியுள்ளார். அவருடைய இரக்கம் என்றுமே வற்றாத ஊற்று. அவர் தம் கரத்தின் வலிமையைக் காட்டினார். நெஞ்சில் செருக்குற்றோர் கதிகலங்கினர். எளியோரைக் கைத்தூக்கிவிட்டார். கடவுள் தம் மக்கள் மீது கொண்டுள்ள இரக்கத்தை நினைவு கூர்கின்றார்.



### இவ்வாரத்தின் இறைவார்த்தை

“அவர் தம்முடைய சொந்த ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு வெளியே கூட்டிச் செல்வார்” (யோவா 10:3)



# திருவிழா வழிபாடு

– சுவாமி ஆ. லூயிஸ்.

அன்பின் பாதையில் பயணிக்கும் அனைத்து சமயங்களும் பல்வேறு விதமான பெருவிழாக்களையும், திருவிழாக்களையும் ஆண்டு முழுவதும் தனியாக, குழுவாக, கிராமமாக, மாநிலமாக, நாடாகக் கொண்டாடுவதை நாம் கண்டு வருகிறோம். அன்றாட சாதாரண வழிபாடுகளைவிட சிறப்பான வழிபாடுகளை மக்கள் மேற்கொள்வது பாராட்டுக் குரியதாகும். இவ்வாறு நமது நாட்டில் திருவிழா ஒரு சிறப்பான முக்கியத்துவத்தைப் பெற்று வருகிறது. பல்வேறு விதமான சிக்கல்கள் திருவிழா நாட்களில் இடம் பெற்றிடினும் திருவிழா உணர்வு மறைவதில்லை. இவ்வாறு மக்களின் தெய்வ பக்தி போற்றி வளர்த்தெடுக்கப்படுகிறது என்பது பாராட்டுக்குரியதாகும்.

***மதிப்பீட்டின் மோதல்கள்:*** பக்திப் பாதையில் இடம் பெறும் திருவிழாக்களின் கொண்டாட்டங்கள் பன்முகத் தன்மையில் இடம் பெறுகின்றன. கடவுளைப் பல்வேறு கோணங்களில் அனுபவித்து பல்வேறு திருவிழாக்களைக் கொண்டாடுவதில் ஆரோக்கியமான அநுகூலங்களும், சில சிக்கல்களும் இடம் பெறுவதை நாம் புரிந்து கொண்டு வளர்த்தெடுப்பது அனைவரின் பொறுப்பாகும்.

பல்வேறு மொழிகள், இனங்கள், சாதிப் பிரிவுகள், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், காலங்கள், கோவில்கள், குலதெய்வங்கள், சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள், பெரியோர், சிறியோர், பாதிக்கப்படுவோர், ஆண்கள், பெண்கள், இளம் உள்ளத்தினர், சிறுவர் சிறுமியர், முதியோர், வரி வசூல், தேர்கள், சோடனைகள், மேளம் தாளம், கொட்டு, கிராமியப் பின்னணி, படித்தவர், படிக்காதவர், இலக்கிய மரபு, எளிடையான மரபு, பூசாரிகள், பக்தர்கள், ஊர் பெரியவர்கள், முக்கியஸ்தர்கள், விலக்கப்படுவோர், வெளியூர், உள்ளூர், தர்ம கர்த்தாக்கள், நன்கொடையாளர்கள், பூர்வீகம், நவீனம், மாறாத கூறுகள், மாறும் கூறுகள், என்று பல்வேறு மதிப்பீடுகளுக்கு உடன்படுவதால் மோதல்கள் இடம் பெறுவது இயல்பு. இவைகள் அனைத்தையும் குலதெய்வத்தின் ஒளியில் கண்டால், சந்தோஷமாக சமாதானமாக திருவிழாக்களை நாம் கொண்டாட இயலும். இதைத்தான் இந்தியாவில் நாம் கண்டு வருகிறோம். பக்தியை வளர்ப்போம், பகிர்வோம், பயணிப்போம்.

**இயேசுவின் ஒளியில்:** கிறிஸ்தவ மக்கள் மத்தியிலும் திருவிழாக்கள் நாட்டின் மரபுக்கும், யூத-கிறிஸ்தவ மரபுக்கும் ஏற்ப இடம் பெறுவதுண்டு. நமக்குள்ளும் நல்லவைகள், நலம்குறைந்தவைகள் இடம் பெறுவதுண்டு. வழிகாட்டிகள் இவைகளை நல்லமுறையில் கண்காணிக்க முயலுகின்றனர். இங்கும் சில சமயங்களில் போட்டிகள் இடம் பெறுவதுண்டு. இருப்பினும் கிறிஸ்தவர்கள் சிறப்பான முறையில், எடுத்துக் காட்டாக திருவிழாக்களைக் கொண்டாடுவது நமது கடமையும் பொறுப்புமாகும்.

எதையும் அழிக்காமல், பாவத்தைத் தவிர, இயேசு முழுமைக்கும், நிறைவுக்கும் அழைத்துச் செல்வதை ஆதாயமாக, அடித்தளமாகக் கொண்டு நமக்குள்ளும், ஏனையோர் முன்னும் கிறிஸ்தவ சமூகம் இடறலாய் இல்லாது, எடுத்துக்காட்டாய் இருப்பது முக்கியம். உயிர்த்த ஆண்டவரின் ஆவியின் ஒளியில் நாம் எதையும் யாரையும் பக்குவமாய், படிப்படியாய் சரிசெய்ய இயலும். இம்முறையை நமது பங்குகளில் நாம் பார்த்து வருவது பாராட்டுக்குரியது, தொடர்ந்து கண்காணிப்பது நமது அழைப்பின் பொறுப்பாகும். இருப்பினும் இன்னமும் சிக்கல்கள் ஓய்ந்தபாடில்லை. முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை.

கிறிஸ்தவ மக்களின் விசுவாசத்தைத் திட்டமிட்டு வளர்த்தெடுத்தால் சிக்கல்கள் தீரும், சாட்சியம் வளரும். சாதிவேறுபாடு, மொழி வேறுபாடு, இருப்பவர் இல்லாதவர் வேறுபாடு போன்ற சிறு சிறு தடைகளை இயேசுவின் ஒளியில் சமாதானமுறையில் நமது விழாக்களைக் கொண்டாட இயலும். நமது விசுவாச ஒளியைப் பகிர்ந்து கொள்ள இயலும், பிற மறையினர் விழாக்களுக்கும் நாம் ஒரு சவாலாக சான்று பகர இயலும்.

***நமது திருவிழாக்கள்:*** பல்வேறு அனுபவங்களோடு கிறிஸ்தவத் திருவிழாக் கொண்டாட்டங்கள் எங்கும் இடம் பெற்று வருகின்றன. அருள்வாக்கின் அடிப்படையிலும், ஏழைகளுடன் பகிர்வு என்ற தர்மத்தின் ஒளியிலும் திருவிழாக்களை விமரிசனம் செய்ய கற்றுக்கொள்வோம். ஆரோக்கியமான மரபுகளை ஆதரித்து, நலம் குன்றிய நிலைகளை மேற்கொண்டு, கிறிஸ்தவர்களின் பக்தியை ஆழப்படுத்தவும், மற்றவர்கள்முன் நற்சான்று பகரவும் திருச்சபை முனைவது முக்கியம்.

ஆவியிலும் உண்மையிலும் இடம் பெறும் திருவிழாக்கள் இடம் பெறுவது நல்லது. இத்தகைய சாரங்களைவிட்டு விலகிச் செல்லும் விழாக்களை நெறிப் படுத்துவது முக்கியம். வாடிக்கை வேடிக்கை, ஆடம்பரம் ஆர்ப்பாட்டம், வெடி வாணம், குடிப்பழக்கம், வரிச்சுமை முறையற்ற கணக்கு முறை, கௌரவம் வெளிவேஷம் போன்ற காரியங்களுக்கு நமது விழாக்களில் இடம் இல்லை என்பதில் தெளிவான திடமான நிலைப்பாடு தேவை.

நாம் பொதுவாக சாதாரண நடுத்தர மக்கள் என்பதால் நமது செலவினங்களை சீர்படுத்தி, விசுவாசத்தை வளர்ப்பது முக்கியம். வருமானத்தைப் பெருக்குவதைவிட மக்களின் பக்தியைப் பலப்படுத்துவோம். பிற மறையினரின் பங்கெடுப்பை பக்குவமாக வழிநடத்துவோம். சுற்றுப்புறச் சூழலைபேணி வளர்ப்போம். பங்கு திருவிழாக்களைப் பெருக்காமல் ஆண்டுத்திருவிழா ஒன்றை மட்டும் உரிய காலத்தில் கடைபிடிப்போம். நமது சௌகரியங்களைவிட விழாவின், புனிதரின் சிறப்பை முன்நிறுத்துவோம். கிளைப் பங்குகளின் திருவிழாவையும் எளிமையாக அமைப்போம். நற்செய்திப் பகிர்வு,பிரசங்கம் இவைகட்கு ஒருவர் அல்லது இருவர் என்று அனுபவப்பட்ட குருக்களை அழைத்து, மக்களைச் சந்தித்து சிறப்பான முறையில் உதவுவோம். நிறைய குருக்களை காலை, மாலை அழைத்து வினோத வழிக்கு உடன்பட்டு மக்களுக்கு பயனற்ற முறைகளை செம்மைப் படுத்துவோம். சமய உணர்வுகளை அதிகப்படுத்த சமூக உணர்வுகளை நிதானப்படுத்துவோம். போட்டி உணர்வுகளை வளர்க்காது, பக்தி உணர்வுகளை மேம்படுத்துவோம். பங்கு குருவும் மக்களும் இணைந்து விசுவாச வளர்ச்சியில் ஈடுபடுவோம்.

***அகவாழ்வு விழா:*** அகம் புறம் என்ற இருமையை ஒருமை என்று உண்மையில் ஊன்றி நின்று, அன்பென்னும் அலைகளால் அனைவரையும் அரவணைத்து ஆனந்த விழாவை இல்லத்திலும் இதயத்திலும், பங்கிலும் நாம் கொண்டாட நம்மை எப்போதும் தயாரித்துக்கொள்வோம். இயேசுவை இந்திய மக்களோடு பகிர்ந்துகொள்ள திருவிழாக்கள் ஓர் அரிய வாய்ப்பாகும்.

அகவாழ்வு விழாவைத்தான் அருள்வாக்கும் ஆண்டவர் இயேசுவும் விரும்புவது, இந்தியத் திருச்சபையின் விசுவாசத்தை வளர்த்தெடுக்க திருவிழாக்கள் பெரிதும் உதவுகின்றன. ஆழமான பக்திக்கு அன்னை மரியாள் அற்புதமான எடுத்துக்காட்டு, தன்னை அர்ப்பணிப்பதே உண்மையான பக்தி நெறியாகும். இல்லறவாசிகள், துறவிகள், குருக்கள், திரு ஆட்சியாளர்கள் தங்களை ஆண்டவருக்கு முற்றிலும் அர்ப்பணித்துவிட்டால் அதுவே வான்வீடாகும். நம்மிடம் நிலவும் பலவீனங்களைக் காணவும், குறை கூறவும் ஆரம்பித்துவிட்டால் அதற்கு முடிவே இருக்காது. மாறாக பாவங்களுக்கு மத்தியில் உயிர்த்த ஆண்டவரின் பிரசன்னத்தைப் பலப்படுத்தினால் விசுவாச வாழ்வு வளரும், விழாக்கள் பொருளும் அருளும் மிகுந்ததாக இடம் பெறும்.

இதற்குப் பொறுப்பானவர்கள் அனைவரும் என்றாலும் சிறப்பு அழைப்பு பெற்ற குருக்கள், துறவிகள் இதற்கு மிகுந்த கவனம் செலுத்துவது காலத்தின் கட்டாயமாகிறது. நமக்குரிய ஞானப் பணிகளில், சேவையில் ஆர்வமில்லாது, வேறு உலகக்காரியங்களில் கவனம் செலுத்துவது அலகையின் நவீன சோதனையாகும். விழிப்பாய் இருப்போம். விழாக்கள் மதிப்பீட்டின் அடிப்படையில், புனிதத்தின் அடிப்படையில் இடம் பெறுவதாக. வாழ்வின் விழா வாழ்த்துக்களை வாழ்நாள் முழுவதும் கொண்டாடுவோம். ●



# செல்வ சேர்ப்பே பாவமா?

–டாக்டர் அ. மதலைமுத்து, புதுவை–3.

***பண்பட்ட பயணம்:*** நாம் மகிழ்ச்சியாக வாழவேண்டு மென்றே கடவுள் விரும்புகிறார். அதற்கு தேவையான அனைத்து வளங்களையும் வாய்ப்புகளையும் கருணையோடு நமக்குக் கொடுத்துள்ளார். ஆனால், சிலர் மகிழ்ச்சியாக வாழ்வதில்லை. ஏனெனில், சுயநலம், பேராசை மிகு நோக்கங்கள், மற்றும் விருப்பங்கள், நம் வாழ்க்கை பயண திசை, பயணிக்கும் வழிமுறைகள், மற்றும் விதி மீறல்களை தீர்மானிக்கின்றன. ஆகவே, நாம் நல்லுறவு மற்றும் சமாதானத்தை விரும்பினால் ஒருவித அன்புப் பயணத்தை சுவைக்க முடியும். மாறாக, பணம், அல்லது அந்தஸ்தை இலக்காகக் கொள்வதால் எளியோரை ஏறி மிதித்துச் செல்லும் பாவப் பயணத்தைத் தொடருகிறோம். ஆகவே, நாம் நம் இலட்சியங்களை, மற்றும் செயல் முறைகளை உள்ளடக்கிய வாழ்க்கைப் பயணத்தை பண்படுத்த அழைக்கப்படுகிறோம்.

***செல்வரே பாவியா?:*** திருமறை நூல் வாசிப்பவர்களுக்கு ஒரு வினா எழக்கூடும். அது, "ஒருவர் செல்வராக இருப்பதே பாவமா?" என்பதாகும். ஏனெனில், "இயேசு தம் சீடரிடம், "செல்வர் விண்ணரசில் புகுவது கடினம் என நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன்... செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதை விட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது" என்றார். (மத்.19:23,24) 'செல்வரை' ஒரு குறியீடாக இயேசு பயன் படுத்துகிறார். அதாவது, 'செல்வர்' என்பது, ஒருவருடைய செல்வராகும் விருப்பம், மற்றும் நோக்கம், அதை வெல்ல அவர் கையாளும் இறுகிய மனபோக்கு, தீய வழிகள், கள்ளத்தனம் போன்ற பாவங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு தன்மையை ஆண்டவர் சுட்டி காட்டுகிறார்.

***பரிசா புழுவா?:*** பணம், பொன், அந்தஸ்து, அதிகாரம் எல்லாம் ஒரு பரிசா, அல்லது ஒருவரை பாவம் செய்யத் தூண்டும் தூண்டிலில் வைக்கப்படும் புழுவா என ஆராய்வது அவசியமாகும். உணவு, உடை, உறைவிடம் மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கு பொருள் சம்பாதிக்க வேண்டும்தான். அதைத் தாண்டி தலைமுறைகளுக்கு சேமிக்க வேண்டும், கப்பல் போல கார், அரண்மனை போல வீடு வேண்டும், அது என் கவுரவம், பெருமை, என்று ஆசை வானம் பேராசையாக விரியும் போது, தடம் மாறுவது, சதி செய்வது, தட்டி பறிப்பது, தட்டி விடுவது, மேலும் எட்டி உதைப்பது போன்ற பாவங்கள் செல்வர்களின் நடைமுறை யாகிறது. உடனடியாக வாகனம், அல்லது வீடு வாங்க, ஒரு உரிமம் வாங்க, கொடுக்க, வாங்க, வழங்க, ஆளை மிரட்ட, தீர்க்க, மற்றும் பதவியை வாங்க பணமே மையப் புள்ளியாக இன்று இல்லையா? மேலும் இதனால் கடவுள் உணர்வு, நம்பிக்கை, மற்றும் பயம், மக்கள் மீது அன்பு மற்றும் மரியாதை அற்று போவது மிக ஆபத்தான மன வீழ்ச்சியாக உண்டாகிறது.

***வைரமும், வைடூரியமும்:*** தீய வழிகளில் 'கோடி'களை சேர்த்தவர்கள் தங்களை மேட்டுக்குடி என்று ஆணவம் கொள்கிறார்கள். இது தவறு. ஏழைகளை, மற்றும் நல்லவர் களை அவர்கள் இழிவாக நடத்துகிறார்கள். இது கடவுளுக்கு அருவருப்பானதாகும். நாம் பெற்றது அனைத்தை யும் கடவுளின் இரக்கத்தால் பெற்றோம் என்ற எண்ணம் கடவுள் நம்பிக்கையின் ஆணிவேராகும். நாம் ஒடுக்கப் பட்டோருக்கு உதவும் நம் நற்செயல்கள் நாம் வான் வீட்டில் சேமித்து வைக்கும் வைரமும் வைடூரியமுமாகும். இந்த நற்செய்தியை அனைவருக்கும் அறிவிப்பது நம் கடமை யாகும். "....அவர்கள் (செல்வர்கள்) மேட்டிமை உணர்வு கொள்ள லாகாது....நம்முடைய இன்பத்திற்காகவே எல்லா வற்றையும் அளிக்கும் கடவுளை மட்டுமே எதிர்நோக்கி இருக்க வேண்டும். அவர்கள்... தங்களுக்குள்ளதைத் தாராள மனதோடு பகிர்ந்தளிப்பார்களாக" (1திமோ.6:17-18).

***கதிரவனால் கருகும் புல்:*** சீரிய வழிகளில் கடுமையாக உழைத்து, படித்து, முயன்று பொருள் ஈட்டி நாம் மகிழ்ந்து வாழும் போது கடவுளும் மகிழ்கிறார். ஆனால், செல்வம் நிலையற்றது. சருக்கல் நிகழக்கூடும். அப்பொழுது நம் வாழ்க்கை கதிரவனின் சூட்டால் கருகும் புல்லாகக் கூடும். அப்பொழுதும், வறுமை, மற்றும் துன்பத்திலும் கடவுளோடு இணைந்து, எதிர்நோக்கோடு, மகிழ்ச்சியாக வாழ கடவுள் நம்மோடு துணை நிற்கிறார். "செல்வச் செழிப்பில் இருப்பவர் கள் தாங்கள் தாழ்நிலை அடையும் போதும் மகிழ்ச்சியாய் இருப்பார்களாக... செல்வரும் தம் அலுவல்களில் ஈடுபடும் போதே அழிவுறுவர். (யாக்1:10-11)

***ஈர்க்கும் சூழல்கள்:*** "... அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்னும் பெயர் கொண்ட செல்வர் ஒருவர் அங்கே வந்தார். அவரும் இயேசுவுக்குச் சீடராய் இருந்தார். அவர் பிலாத்திடம் போய் இயேசுவின் உடலைக் கேட்டார். பிலாத்தும் அதைக் கொடுத்துவிடக் கட்டளையிட்டான். யோசேப்பு... தமக்கெனப் பாறையில் வெட்டியிருந்த புதிய கல்லறையில் கொண்டு போய் வைத்தார். அதன் வாயிலில் ஒரு பெருங்கல்லை உருட்டி வைத்து விட்டுப் போனார்." (மத்.27:57-60) அவர் இயேசுவை கொலை செய்ய திட்டமிட்ட தலைமைச் சங்கத்தாரின் திட்டத்திற்கும் செயலுக்கும் இணங்காதவராக இருந்தார். (லூக்.23:51) யோசேப்பைப் போல செல்வர்கள் நல்லவர்களுக்கு உதவவும், இன்னல், மற்றும் ஆபத்து இருந்தாலும் நல்ல செயல்களுக்கு பணத்தையும் தங்கள் செல்வாக்கையும் பயன்படுத்த வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார். லஞ்சம், வன்முறை, அநீதி, சூழ்ச்சி, மிரட்டல் அடக்குமுறை சூழல்கள் நம்மை இழுக்க, மற்றும் பலியாக்க முனையக் கூடும். ஆனால், கடவுள் பிள்ளைகளான நாம் அந்த பாவ வலையிலிருந்து விலகி, நேர்மை, மற்றும் ஒடுக்கப் படுவோருக்கு பாதுகாப்பாக நின்று குரல் கொடுப்பவர்களாக வாழ அழைக்கப்படுகிறோம் நண்பர்களே. ●

## பேராசிரியர் பா. வளன் அரசுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

## மதுரை இலக்கிய இணையர் அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்டது.

மதுரை மணியம்மை பள்ளிப் பாவேந்தர் அரங்கில் பேராசிரியர் பா.வளன் அரசு அவர்களுக்கு ***வாழ்நாள் சாதனையாளர் விருதினை*** இலக்கியச் செம்மல் பொறியாளர் சுரேசு வழங்கிப் பொன்னாடை அணிவித்தார். உலகத் திருக்குறள் தகவல் மையத் தலைவர் பேராசிரியர் பா. வளன் அரசு அவர்களின் தமிழ் இலக்கியப் பணிகளைப் பாராட்டி வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கான தகுதியுரையினை முத்து இளங்கோவன் படித்தார். "தென்மொழி" இதழாசிரியர் மா. பூங்குன்றனுக்குச் சிறந்த இலக்கியச் சீரிதழ் வழங்கப்பட்டது. சாகித்திய அகாதெமி நூலாக வெளி வந்துள்ள தேர்ந்தெடுத்த சங்க இலக்கியப் பாடல்கள் என்னும் பேராசிரியர் இரா. மோகன் நூலினை அறிமுகப்படுத்திப் பேராசிரியர் அருணகிரி உரையாற்றினார். முதற் சுவடியைத் தவத்திரு சதாசிவானந்தா பெற்றுக்கொண்டார். வரவேற்று விழா ஒருங்கிணைப்பாளராக பள்ளித் தாளாளர் வரதராசன் விளங்கினார். பேராசிரியர் பா.வளன் அரசு ஏற்புரை வழங்கினார். பேராசிரியர் இரா. மோகன் நன்றி கூறினார்.

பா. வளன் அரசு.

## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி -164



**மே மாத வெளியீடு. (2017)**

**அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ், தாராபுரம்.**

வாரம் தவறாமல் 111 ஆண்டுகளாக மலர்ந்து வரும் சர்வவியாபி இதழின் நறுமணத்தை முழுமையாக முகர்ந்து அனுபவித்துவரும் வாசகர் பெருமக்களுக்கு ஜெபம் நிறைந்த வாழ்த்துக்கள். மே மாதம் என்றால் நம் நினைவிற்கு வருவது அன்னை மரியாளின் மாதம், தேவ அழைத்தல் வாரம் திருமண நிகழ்ச்சிகள், புதுநன்மை விழா, தான் வரும். தேவ அழைத்தலைப் பற்றி நாம் பேசும் போது நாம் ஒரே வார்த்தையில் பேசலாம் இறைவன் ஒரு சிலரை மட்டும் நம்பிக்கைக்குரியவராக அழைக்கிறார். அவரின் அழைப்பிலே வாழவே இறைவனும் விரும்புகிறார். தற்போது எம் சபை 100 ஆண்டுகளைக் கடந்து 8 மாதங்கள் முடிவுற்ற நிலையில் எம் சபை ஆழமரம் போல் வேரூன்றி வளர்ந்து வருகிறது. எம் சபையில் தற்போது இறை அழைத்தல் இயக்குநராக செயல்பட்டு வருகிறேன். உங்கள் பங்கில் ஆர்வம் உள்ள +2, தொழில்கல்வி, கல்லூரி படிப்பு படித்த இளைஞர்கள் இருந்தால் எனது அலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு தெரிவிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இறைவன் நம் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

இறை ஊழியன் அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ்**

**குறிப்பு:** 1) பதில்களை **10–6–2017** க்குள் அனுப்பி வைக்கவும். 2) ஆசிரியரின் இறுதித் தீர்ப்பே முடிவானது. 3) பதிலை அதிகாரம், வசனத்துடன், சரியான முகவரியுடன் எழுதவும். 4) குலுக்கல் முறையில் முதல் **10** நபர்களுக்கு பரிசுகள் அனுப்பி வைக்கப்படும். 5) பதில்களை இன்லேண்ட் (உள்நாட்டு) கடிதத்தில் (அ) ஐந்து ரூபாய் ஸ்டாம்பு ஒட்டிய கவரில் மட்டுமே எழுதி ❖ குறியிட்ட முகவரிக்கு அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன். 6) அல்லது e-mail: soosaimariarajendran@ gmail.com என்ற முகவரிக்கும் அனுப்பலாம்.

### தோபித்து, யூதித்து நூல்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | 1 | | | | |
| | | 11 | 10 | 14 | | | | | 13 |
| | | | | | | 21 | | 19 | |
| | 2 | | | | | | | | |
| 5 | | | | | | | 20 | | |
| | | 15 | | | | | | 18 | 3 |
| | | 12 | | | | | | | |
| | | | | 6 | | 16 | | | |
| | | 9 | | 17 | | | | | |
| 8 | | | | | 7 | | | | |

### இடமிருந்து வலம்:

1. என் கடவுளைச்.................இருத்தினேன்.
2. உறவு.....................வாய்ப்பு.
5. இதோ....................என்றன.
7. கடவுளாகிய ஆண்டவரை நோக்கிக்
8. .................முழுவதுமே பிடிபடும்.
12. அவர்கள் விருந்து ஏற்பாடு............
15. உமது திருப் ..................விளங்கும்.
16. உலகம் முழுவதிலும்.................மக்களினத்தார் அனைவரும்.
17. கடுஞ்சினஞ்....................நெபுகத்னேசர்.

### வலமிருந்து இடம்:

1. ஆனால் மீண்டும்............என் தந்தையை மக்கள் பழிக்கலாம்.
3. ஆனால் மிகவும்.....................என்றார்.
6. கடற்கரைப்.............இறங்கிச் சென்று.
7. எனவே..................வேண்டாம் என்றார்.
9. ................விலையுயர்ந்த நறுமண எண்ணெய் பூசி
13. ................என்னுடன் கொண்டு வந்தார்.
19. நகர மதில் ................தொங்க விடுங்கள்.

### மேலிருந்து கீழ்:

1. வேற்று மக்களிடையே எங்களைச்..................
2. பாவிகளுடன் அதை பங்கிட்டுக்............
3. தீராக் கொள்ளை நோய்களால்..............
4. நம்முடன் ............க் கொண்டு வீடு திரும்புவோம்.
5. ............மக்கள் யாவரையும் அழைத்துத் தனது இரகசியத் திட்டம்.
10. எனவே நான் நான்று.............மாட்டேன்.
11. தம் ...................சாராவை அழைக்க அவள் வந்தாள்.
13. உண்டு................இங்கேயே தங்கியிரு
14. ...........உம்மை நலமுற அழைத்துச் செல்வாராக.
21. அதனால் கடவுள்.............அவனைத் தண்டித்தார்.

### கீழிருந்து மேல்:

2. கூலியை உடனே.............விடு,
3. அவனுடைய பணியாளனோடும்............வீழ்த்தும்.
7. மகிழ்ச்சிக் ...................வடித்தவாறே என் மகனே.
18. நெபுகத்னேசரை................வழிபட வேண்டும்.
20. அவரது.............ஒரு வாளைக் கொடுத்தீர்.

**பதில் அனுப்ப வேண்டிய முகவரி:**

❖ அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ், தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 163** தூய மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம் தாராபுரம் – **638 656**, திருப்பூர் –Dt. செல்: **99423 11068**

## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 155

### 2016 ஜுலை மாத போட்டியின் முடிவுகள்

***சரியான பதில்கள்: ஏசாயா 17 முதல் 41 வரை***

**குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 10 பேர்.**

1. Rev.Sr. அமலோற்பவமேரி-அரியாங்குப்பம், 2. P.எலிசபெத் பீட்டர் - மன்னார்குடி, 3. P.மரிய சகாயசெபஸ்டின் - போளூர் 4. G.டெய்சி - எருக்கூர் 5. A.மரிய கிறிஸ்துராஜ் Rtd.HM-விழுப்புரம். 6.Sr.ஜூலி எலிசபெத்-மாதாக்கோட்டை 7.Mrs.மதியழகி-ஈரோடு 8.Sr.ப்ளோராமேரி- உளுந்தூர் பேட்டை, 9.M.பிரிஜிட் விமலா -புலியகுளம், 10. N.ஜோசப்பீன் வசந்தி-தேனி,

**இடமிருந்து வலம்**
1) மற்றோர் 19:2
5) கோலால் 30:31
8) புரிந்து 41:20
9) பதுக்கி 23:18
12) விழத்தள்ளி 25:12
13) செயற்படுத்தும் 28:29
14) சினம் 27:4
16) 'தூய வழி' 35:8
18) பாழடைந்து 17:1
19) இடமே 28:8

**வலமிருந்து இடம்**
2) கலக்க 31:9
4) மாட்டான் 37:34
6) மேன்மை 21:16
9) படரும் 18:5
14) சிங்கம் 38:13
15) பகை 28:19
16) தூதர் 30:4
19) இறந்த 26:19

**மேலிருந்து கீழ்**
1) மறந்து 17:10
2) கடுந்துயரும் 30:6
3) சாரோன் 33:9
4) மாவேந்தர் 36:13
11) பெண்டிர் 27:11

**கீழிருந்து மேல்**
7) நாட்டம் 29:20
10) தேரில் 30:16
13) செவிடன் 21:3
17) சாபம் 24:6
18) பாய்ந்தோடும் 18:2
19) இனம் 26:15

### பாராட்டும், இறை ஆசீரும் பெறுபவர்கள்

G. அமலா, J.அமலி, S. சூசை அருள் –K.புதூர், Sr. ப்ளோரட்மேரி, A.ஆரோக்கியசாமி–உளுந்தூர்பேட்டை, பெரியநாயகம் ஸ்தனிஸ், A. ஜோசப்ராஜன்–அணையேரி, A. மரியப்பன் Rtd.Tr., S. தனசீலி–விரியூர், Sr. அமலோற்பவமேரி, Sr. ஹிலாரியன்மேரி, Sr. நெரீனாமேரி, Sr.எபபோனாமேரி–அரியாங்குப்பம், Sr., ஆரோக்கியசெல்வி–இடையர்பாளையம், F. ஜெஸிந்தா–கொடுங்கால், J.பிலிப் பீட்டர் ஜான் மலையப்பா– வன்னியர்பாளையம், L. டல்சி டிக்குருஸ்–போத்தனூர், M.பிரிஜிட் விமலா–புலியகுளம் பிலோமினா சந்தியாகு– புதுவிளாங் குடி. L.லிட்டில் ப்ளவர், R.லூக்காஸ், A. உபகாரசாமி, A. மரிய கிறிஸ்துராஜ் Rtd.H.M.–விழுப்புரம், S.தங்கராஜ், ராஜம் தங்கராஜ்–வேலாண்டிபாளையம், S.அருள்ராஜ், N. லூர்தஸ்–மாடம்பாக்கம். லில்லி சேவியர்–ராஜா அண்ணாமலைபுரம் – (தொடரும்)



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



## 16ஆம் படலம்

வாதைகளின் வரிசையிலே மூன்றாவது வருவது கொசுக்களின் வாதை. ஆண்டவரின் ஆணையின்படி ஆரோன் தம் கரத்தின் கோலால் புழுதியை அடிக்க, புழுதியெல்லாம் கொசுக்களாக உயிர்பெற்று எழுந்து மனிதர் மேலும் விலங்குகள் மேலும் மொய்த்துக் கடித்துத் துன்புறுத்தின. எகிப்திய மந்திரவாதிகளால் இது இயலாமல் போகவே அவர்கள் பார்வோனிடம் "இது கடவுளின் கைவன்மையே" என்றனர். (விப.8:16-19)

**19 அதிகாலையில் அரசகுருக்கள் புறத்தூய்மை செய்த உடலோடு சென்று, இரவில் கோவில் கருவறையினுள் அறிதுயில் கொள்ளும் கடவுளர்களை வேத மந்திரங்களை இசைப்பாட்டுடன் முழங்கிக் கொண்டுபோய் எழுப்ப முனையும் நேரத்தில், புழுதிக் கொசுத்திரள் பறந்து வந்து படிந்து மொய்த்ததால் அவர்கள் உடல் தூய்மை கெடவே செய்வதறியாது திகைத்தனர்.**

உடம்பினிலே கொசுமொய்க்க உடல்தூய்மை கெட்டதுவே
உச்சரிக்கும் மந்திரத்தால் வரும்பயன்கள் தடைபடுமே;
நடப்பதனின் நெறிப்படியே நாட்காலை கடவுளரைத்
துயிலெழுப்பப் போனவர்கள் துவண்டுமனம் திகைத்தனரே;
விடவிடத்தே நின்றார்கள் வந்தவதை தெரியாமல்!
தொழுவந்த குடிமக்கள் கொசுவதைக்கத் திரும்பினரே;
குடம்வழிந்த புதுப்பாலில் கொசுவந்து மொய்த்ததனால்
குருபூசைக் கதுவுதா தென்றவரும் விழித்தனரே!

(நடப்பதனில் - சமய நடைமுறை வாழ்க்கையின்; விடவிடத்தே-நடுநடுங்கியே; வந்ததை-யாவே கடவுள் ஆணையால் புதிதாய் எகிப்தைத் தாக்கிய புழுதிக் கொசுவால் வந்த வாதை)

**20 காற்று வீசும்போது நிலத்தின் புழுதி காற்றில் பறப்பது இயல்பு. ஆனால் அது உயிர்பெற்று பறப்பதில்லை. இந்த மூன்றாவது வாதை நிகழ்வில் யாவே கடவுளின் (ஜெகோவா) ஆணையால் உண்மைக் கொசுக் களாக உயிர்பெற்று எழுந்து பறந்தன! மனிதர் மேலும் விலங்குகள் மேலும் மொய்த்தன; கடித்தன. அவை கடித்தது விச கடியாகக் கடுகடுத்துத் துன்புறுத்தியது. இப்புரட்சியை இறைவன், எகிப்திய மத குருக்களுக்கும் மந்திரவாதிகளுக்கும் எதிராக நடத்தினார்!**

நாடெங்கும் பேரதிர்ச்சி! நடக்காத புதுப்புரட்சி!
நாட்டிலுள புழுதியெல்லாம் உயிர்பெற்றுக் கொசுவாகி,
வீடெங்கும் புழங்குபொருள் புகுந்தனைத்தும் மொய்த்தனவே!
வீதியிலே நடப்போர்தம் முகம்மறைய, உடல்மறைய
காடெங்கும் காடுறையும் யானையுடல் தான்மறைய
கண்ணுக்கே தெரியாத கொசுகூடி மொய்த்தனவே;
ஏடெங்கும் காணாத இப்புரட்சி இயற்கையிலே
இறைவனது கைவன்மை! இஃதறியான் பார்வோனே!

(நாட்டிலுள புழுதியெலாம் உயிர்பெற்று-எல்லாம் வல்ல யாவே கடவுள் ஒருவரே உயிரளிப்பவர், அவராலேயே நிலத்துப் புழுதியெல்லாம் கொசுவாக உயிர் பெற்று எழுந்து பறந்தன.)

**21 எங்கும் பெருங்கூட்டமாய்க் குவிந்து, கடித்துத் துன்புறுத்தும் நுண்ணிய நச்சுக் கொசுக்களை எப்படி ஒழிப்பது என்று பெருஞ் சினங்கொண்டு பார்வோன் எண்ணிப் பார்த்தான். இக்கொசுக் கூட்டங்களை அழித்து ஒழிக்கத் தன்னுடைய போர்க்கருவிகள் பயன்படமாட்டா என்பதை உணர்ந்த அவனோ மனம் புண்பட்டுக் குழப்பமடைந்தான்.**

எங்கெங்கும் கொசுக்கூட்டம் ஏராளம்! ஏராளம்!
இதைப்போக்கும் வழிகாண முற்பட்டான் பார்வோனும்;
பொங்குந்தன் சினத்தால் புதுவாதை தானொழிக்க
போக்கோலம் பூண்டவனாய்த் தோள்தட்டி நிமிர்ந்தாலும்
தங்கித்தன் உடம்பெங்கும் தான்தவிக்க வைத்திருக்கும்
தவிடன்ன கொசுவொழிக்க தன்னரிய படைக்கலன்கள்
எங்கெங்கும் குவிந்திருந்தும், குவிந்துவதை விளைவிக்கும்
இச்சன்னக் கொசுப்படையை என்செய்யும் படைக்கலன்கள்!

(தவிடன்ன தவிடுபோன்ற; படைக்கலன்கள் - போர்க்கருவிகளாகிய வேல்வாள், ஈட்டி, அம்பு போன்றவை; இச்சன்ன - இந்த நுண்ணிய கொசுக்களை)

**22 பார்வோன், தன் சமய மூப்பர்களை அழைத்து, கொசு தோன்றி வாதைபுரிவதைச் சுட்டி, இதை அவர்கள் முன் கூட்டியே தெய்வ வாக்காய் அறிந்து ஏன் அறிவிக்கவில்லை என்று கடிந்து கொண்டான்.**

50

## இளம் உள்ளங்களுக்கு

# உருவம் கண்டு எள்ளாமை வேண்டும்



– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

**சர் ஐசக் நியூட்டன்:** "நிலையாக இருக்கும் பொருள் மாறுபட்ட சக்தியால் தாக்கப்படாத வரை நிலையாகவே இருக்கிறது. இயங்கும் பொருள் மாறுபட்ட சக்தியால் தாக்கப்படாத வரை இயங்கிக்கொண்டே இருக்கிறது." இந்த அறிவியல் கோட்பாட்டை உலகிற்களித்தவர் புவி ஈர்ப்பு சக்தியை கண்டுபிடித்த உலகப் புகழ்பெற்ற அறிவியல் விஞ்ஞானி சர் ஐசக் நியூட்டன்.

**தன் கையே தனக்கு உதவி:** நியூட்டன் ஒருமுறை தன் காரை தானே தனியாக ஓட்டிச் சென்றார். திடீரென்று கார் தடுமாறியது. உடனே காரை நிறுத்திவிட்டு பார்த்தார். காரின் ஒரு டயர் பஞ்சர் ஆகியிருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மெக்கானிக் ஷாப் ஏதுமில்லை. தன் கையே தனக்கு உதவி என்று எண்ணியவராய், பஞ்சர் ஆன சக்கரத்தை கழற்றிவிட்டு ஸ்டெப்னி சக்கரத்தை மாற்றிவிட எத்தனித்தார்.

**ஏழை என்றால் இளக்காரம்:** சக்கரத்தை மாற்றும்போது, அருகில் வைத்திருந்த போல்ட்டுகள் கைதவறி அருகிலிருந்த சாக்கடை குட்டையில் விழுந்துவிட்டன. அந்த சாக்கடையில் தான் இறங்க முடியாது. எனவே அருகில் யாராவது இருக்கிறார்களா என்று சுற்றும் முற்றும் பார்த்தார். அங்கே அழுக்கு உடையணிந்த ஏழை ஒருவன் இவர் செய்வதை யெல்லாம் பார்த்து கொண்டிருந்தான். அவன் அவர் அருகில் வந்து ஏதாவது உதவி தேவையா என்று கேட்டான். விஞ்ஞானி யான தன்னால் முடியாததை இவன் என்ன செய்துவிடப் போகிறான் என்ற கர்வம் அவனை விரட்டி விடச் செய்தது.

**சிறு குச்சியும் பல்குத்த உதவும்:** நியூட்டன் சிறிது நேரம் யோசித்தார். பிறகு அந்த அழுக்கு உடை அணிந்தவனை பார்த்தார். இந்த சாக்கடைக்குள் விழுந்த போல்ட்டுகளை எடுக்க இவன்தான் சரியான ஆள் என்று தீர்மானித்தார். உடனே அவனை அருகில் அழைத்து சாக்கடையில் விழுந்த போல்ட்டை தேடி எடுக்க சொன்னார். அவன் சிறிது யோசித்தவனாய் அவரை நோக்கி, "அந்த போல்ட்டுகளை தேடாமல் நீங்கள் காரை கிளப்புவதற்கு ஒரு யோசனை சொல்லட்டுமா?" என்றான். நியூட்டனுக்கு கர்வத்தினால் கோபம் தலைக்கேறியது. "அறிவாளியான எனக்கே நீ யோசனை சொல்லப் போகிறாயா? சொல்" என்றார். அவன் அருமையான யோசனைக் கூறினான். "ஐயா, மீதமுள்ள மூன்று சக்கரங்களிலிருந்தும் ஒவ்வொரு போட்டை கழற்றி இந்த சக்கரத்தில் பொருத்தி மாற்றிவிட்டால் நீங்கள் காரை ஓட்டிக் செல்லலாம். அருகில் இருக்கும் மெக்கானிக் ஷாப்பில் குறைவாக உள்ள போல்ட்டுகளை போட்டு நிறைவு செய்து கொள்ளலாம்? என்றான். முதலில் கர்வத்தால் கோபப் பட்டாலும், அறிவாளியான தனக்கு இந்த சமயோசித புத்தி இல்லாமல் போனதை நினைத்து வெட்கி வேதனைப்பட்டார்.

**சிந்திக்க:** நீ.மொ.12:23,24 - "தம் வாயையும் நாவையும் காப்பவர் இடுக்கண் வராமல் தம்மைக் காத்துக் கொள்வார். ஏளனம் செய்யும் செருக்குடையோரின் பெயர் இறுமாப்பு; அளவு கடந்த பெருமையுடன் நடப்பதே அவர் போக்கு."

அழைத்தரசன் குமிறிட்டான் தன்சமய நபிமார்கள்,
அருவருப்பாய்க் கொசுமொய்த்து வாதைபுரி நிலைசுட்டி!
இழைப்பதனால் பெருந்துன்பம் எழிலார்ந்த அரண்மனையில்
இருந்துலவும் அரசியரும் ஏங்கிமிகத் தவிக்கின்றார்!
தழைநிறைய மொய்துகிளை தாவியவை குவிந்தெழுந்தே
தருமறைய பறந்தெங்கும் ஒருமித்தே கிளைப்பதைப்போல்
இழைத்தழகாய் மணிக்கற்கள் பதித்திட்ட அணியணிந்த
இளமைபொலி அரசியரின் பொன்மேனி மொய்த்தியங்கும்!

(அருவருப்பாய் - வெறுக்குமாறு; தழைநிறைய - பச்சிளம் இலைகள் நிறைய; தருமறைய-மரம் முழுதும் மறையுமாறு; நபிமார்கள்- சமய மூப்பர்கள், தெய்வவாக்குக் கூறுபவர்கள்)

பிறகு (ஞாயிறு) தன் இடத்திற்கு விரைந்து சென்று மீண்டும் தோன்றுகின்றது. (ச.உ. 1:5)

## விண்ணக வாழ்வின் பதினைந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி



திரு. **மனோ**

## விவேகானந்தம் அந்துவான்

**(Millitaire en Retraite)**

**சீவியத்தில் உம்மை அதிகமாக நேசித்தோம் மரணத்தில் உம்மை ஒருபோதும் மறவோம்.**

**இறப்பு: 12-5-2002**

**இரக்கம் மிகுந்த இயேசுவே! எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து தன் வாழ்வின் கடமைகளை முடித்து எங்களை ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டுப் பிரிந்து சென்ற இவரின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் - ஆமென்.**

**பிரிவால் துயருறும்**

**அன்பு மனைவி**

**பிள்ளைகள், மருமகன், மருமகள்கள், பேரப்பிள்ளைகள்.**

புதுவை.

**திருப்பலி 12-5-2017 வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு புதுவை, ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.**

---

## 32 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**தோற்றம் :09-01-1927**



**மறைவு :07-05-1985**

Mr. Rayer Innocent

(soldat et Retraite)

“உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” - யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 7-5-2017 ஞாயிற்றுகிழமை காலை 7.15 மணிக்கு நெல்லித்தோப்பு, விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் திருப்பலி நிறை வேற்றப்படும்.

**பிரிவால் துயருறும்**

**மனைவி: மரி பிலோமென் ராயர்**

**மகள்: Sr. மரி எவ்லின் ராயர்**

**மகன்கள், மகள்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.**

புதுவை.

---

## விண்ணக வாழ்வின் 40 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**தோற்றம் :01-01-1891**



**மறைவு :06-05-1977**

SAINT AUGUSTE Cojandassamy

வாழ்வின் வைகறையே இறைவா! இவ்வுலகில் எங்களோடு வாழ்ந்து, எங்களுக்கு வாழ்வையும் விசுவாசத் தையும் வளமையையும் தனது தியாக வாழ்வின் வழியாக தந்து, உம் திருவடி வந்துள்ள உமதடியார் அவர்களின் ஆத்துமத்திற்கு மீட்பையும், முடிவில்லா வாழ்வையும் அளித்து புனிதர்களின் கூட்டத்தில் அவரைச் சேர்த்தருள உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம், ஆமென்.

**அன்னாரை இழந்து துயருறும்**

**குடும்பத்தினர்.**

**புதுவை.**

## விண்ணக வாழ்வின் 29 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**தோற்றம் :27-11-1932**



**மறைவு :10-05-1988**

SAINT AUGUSTE Cojande Francois

வாழ்வின் வைகறையே இறைவா! இவ்வுலகில் எங்களோடு வாழ்ந்து, எங்களுக்கு வாழ்வையும் விசுவாசத் தையும் வளமையையும் தனது தியாக வாழ்வின் வழியாக தந்து, உம் திருவடி வந்துள்ள உமதடியார் அவர்களின் ஆத்துமத்திற்கு மீட்பையும், முடிவில்லா வாழ்வையும் அளித்து புனிதர்களின் கூட்டத்தில் அவரைச் சேர்த்தருள உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம், ஆமென்.

அன்னாரை இழந்து துயருறும்

**குடும்பத்தினர்.**

புதுவை.

## 9 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**தோற்றம் 31-03-1975**



**மறைவு :10-05-2008**

அருட்திரு. **L. ராபர்ட் பிரிட்டோ**

“உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” - யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 10-5-2017 புதன்கிழமை காலை 7.00 மணிக்கு கணக்கன்குப்பம் பங்கு ரோமாபுரி, தூய இருதய ஆண்டவர் ஆலயத்தில் திருப்பலி நிறை வேற்றப்படும்.

**பிரிவால் துயருறும்**

**பெற்றோர்**

**குடும்பத்தினர்.**

ரோமாபுரி, கணக்கன்குப்பம்.

மலர்ந்தது: 05-01-1948



மறைந்தது: 03-05-2016

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

**செபம்**

வாழ்வில் செய்த வல்ல செயல்களால் வந்த துன்பங்களில் மனம் ஒடிந்து விடாமல் வாழ்வில் சந்தித்த அனைவருக்கும் முடிந்த உதவியைச் செய்து உம்மால் அழைக்கப்பட்ட வரும் என்றும் மறக்க முடியாதபடி எங்கள் மனதில் நீங்காமல் நிலைத்துவிட்டவருமான எங்களின் அன்பு சகோதரிக்கு நித்திய பேரின்ப இளைப்பாற்றியை அளித்தருள இறைவா உம்மை வேண்டுகிறோம்.

கனத்த இதயத்துடனும், கண்ணீருடனும் உமதன்பு

பெற்றோர்கள்,
மற்றும் மூத்த சகோதரி Sr. **அனித்தா** FIHM
இதயா ஓய்வு இல்லம், அரியாங்குப்பம், புதுச்சேரி-7.
**சகோதர, சகோதரிகள், உற்றார் உறவினர், நண்பர்கள்**

## Rev.Sr. புனோரிசீமா மேரி எமிலி புனோரரா FIHM

"தீங்கு உமக்கு நேரிடாது வாதை உம் கூடாரத்தை நெருங்காது" - (திருப்பாடல் 91:10)

நினைவு திருப்பலி:

இதயா முதியோர் ஓய்வு இல்லம், அரியாங்குப்பம், பாண்டி-7.
புனித விண்ணேற்பு அன்னை ஆலயம், நெல்லித்தோப்பு.
புனித கார்மேல் அன்னை ஆலயம், கடலூர்-1.
புனித சூசையப்பர் ஆலயம், கடலூர்-2.
புனித வியாகுல அன்னை ஆலயம், விரகாலூர், திருச்சி.
மேற்கண்ட ஆலயங்களில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

---

தோற்றம்: 24-05-1946



மறைவு: 02-04-2017

# 40-ஆம் நாள் நினைவு அஞ்சலி

**செபம்**

அப்பா!
நீங்கள் இல்லாத 40 நாட்களும்
நீங்கள் இல்லாத 400 வருடம்தான்
என் சிறு வயதில்
தாஜ்மஹாலும் உலக அதிசயம்
என்று காட்டினீரே!

அப்பா!
நீதான என் உலக அதிசயம்
என்று இறந்தும் காட்டினீரே!
அப்பா!
என் உலக அதிசயமே!
என் தாய் கண்களில்
அணைகட்ட அப்பா
அடைக்கலம் - இனி
எங்கு தேடுவேன்!
எங்கு காண்பேன்!
எங்கு கேட்பேன்!
உன் பிரிவில்
என் அக்கா!
என் அண்ணன்!
என் தங்கை
என் தம்பி
ஆனாரே!

உன் பிரிவும்கூட
என் நினைவுகளில்
இணக்கம்தான்
அப்பா!
நாம்
பயணித்த காலங்கள்
உன் மகன்
மில்டனின் தொலைத்த
வசந்த காலங்கள்

Yes! My dadI
My Paradise Lost!
My Lovely dad!
I can't Regain
`U'
For ever and Ever.

Always Remembering and Meditating U
My dad! No words to express.......
U are my Everything.

With love
A. MILTON, M.Sc.,M.A.,M.Ed; M.Phil.
The Teacher - Gingee.

**மனைவி**
**மற்றும் குடும்பத்தினர்.**

திரு. **K. அடைக்கலமரிநாதன்** L-@-+L-Dc- ஆசிரியர்

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - (யோவான்.11:25)

நினைவு திருப்பலி: 11-05-2017 வியாழக்கிழமை செஞ்சி, புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

**நித்திய இளைப்பாற்றியை இவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே! முடிவில்லா ஒளி இவர்கள்மேல் ஒளிர்வதாக.**

# விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு அஞ்சலி







**தோற்றம் : 28-04-1928**

**மறைவு : 09-04-2017**





## திருமதி. GERART Victorine

***"ஆண்டவரின் இல்லத்தில் வாழ்நாளெல்லாம் நான் குடியிருக்க வேண்டும்" . திரு.பா.27:4***

**ஜெபம்**

அன்பின் ஊற்றே இறைவா! இவ்வுலகில் எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து, எங்கள் வாழ்விற்கு வழிகாட்டியாய் இருந்து, எங்களுக்கு இறைபக்தியையும், நல்ல பண்புகளையும், கல்வி அறிவையும் ஊட்டி வளர்த்த தியாக உள்ளம் கொண்ட எங்கள் அன்புத் தாய்க்கு நித்திய இளைப்பாற்றியையும், முடிவில்லா ஒளியையும் தந்தருள வேண்டுமென்று, இரக்கம் நிறைந்த இயேசுவே உம்மை நோக்கி மன்றாடுகிறோம். - ஆமென்.

**நினைவுத் திருப்பலி**

இடம்: Chapelle de la Basilique de Notre Dame de Fourvière, Lyon, France.

நாள்: 30 ஆம் நாள்

தேதி: 06-05-2017, காலை 9.30 மணி.

**பிரிவால் துயருறும்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.**

**ஆண்டவரின் கைகளில் நீ அழகிய மணிமுடியாக திகழ்வாய்**

**காப்டிக் ஆர்த்தடாக்ஸ், கத்தோலிக்க இணை அறிக்கை:** 29–4–2017 சனிக்கிழமை, எகிப்து நாட்டின் தலைநகர் கெய்ரோவில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், முதுபெரும் தந்தை 2–ம் தவாத்ரோஸ் அவர்கள் இணைந்து பொதுவான அறிக்கை ஒன்றில் கையெழுத்திட்டனர். இப் பொது அறிக்கை 12 பிரிவுகளைக் கொண்டிருந் தது. கத்தோலிக்க மற்றும் காப்டிக் ஆர்த்தடாக்ஸ் சபைகள் இரண்டும், ஒன்று மற்றதன் திருமுழுக்கை ஏற்றுக் கொள்வதாக அதில் கூறப்பட்டுள்ளது. இத்தகைய அங்கீகரிப்பு, முதல் முறையாக இடம் பெற்றுள்ளது. காப்டிக் ஆர்த்தடாக்ஸ் சபையினர் கத்தோலிக்கத்தில் சேர்ந்தாலோ, கத்தோலிக்கர், அச்சபையில் சேர்ந்தாலோ, மீண்டும் திருமுழுக்குப் பெற வேண்டிய அவசியமில்லை. எனக் கூறப்பட்டுள்ளது. இவ்விரு சபைகளுக்கும் இடையே இடம்பெறும் உரையாடலில், தொடர்ந்து காணப்பட்டு வந்த இப்பிரச்சனைக்கு இதன் வழியாக தீர்வு காணப்பட்டுள்ளது. காப்டிக் சபையின் முன்னாள் திருத்தந்தை 3ம் ஷெனூதா (Shenouda III), கத்தோலிக்கத் திருத்தந்தை ஆறாம் பவுல் ஆகிய இருவரும், நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர், 1973ம் ஆண்டு மே மாதம், முதல் முறையாக சந்தித்ததன் விளைவாக, இவ்விரு சபைகளின் உறவுகளில் மைல்கல் நாட்டப்பட்டது. அறுநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பிரிவினைகளுக்குப் பின், இச்சந்திப்பின் பயனாக, அனைத்து கீழை வழிபாட்டுமுறை திருஅவைகளோடு, கத்தோலிக்க திருஅவை இறையியல் குழு ஒன்றை உருவாக்கியது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், முதுபெரும் தந்தை 2ம் தவாத்ரோஸ் அவர்களும் இணைந்து இவ்வெள்ளி மாலையில் வெளியிட்ட பொது அறிக்கையில், இச்சபைகளுக்கு இடையே யான உறவுகளிலும், இந்த இறையியல் குழுவின் உரையாடலிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் நினைவுகூரப்பட்டு, பொதுவான செபத்தின் வழியாக, விசுவாசத்தில், பகிர்ந்துகொள்ளப்படும் தங்களின் மூலங்களில் மேலும் ஆழப்படு வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, நம் ஆண்டவரின் வானகத் தந்தையை நோக்கிய செபத்திற்குப் பொதுவான மொழிபெயர்ப்புக்கும், இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவை பொதுவான தேதியில் கொண்டாடுவதற்கும் இதில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மனித வாழ்வு, திருமணம் மற்றும் குடும்ப வாழ்வின் புனிதம், படைப்பை மதித்தல் ஆகிய விழுமியங் களில் கத்தோலிக்கரும், காப்டிக் சபையினரும் ஒன்றிணைந்து சான்று பகரவும், தங்களின் விசுவாசத்திற்காக, குறிப்பாக, எகிப்திலும், மத்திய கிழக்கிலும், நசுக்கப்பட்டு கொல்லப்படும் அனைத்துக் கிறிஸ்தவர்களுக்காக, இவ்விரு சபையினரும் உருக்கமாகச் செபிக்கவும், இவ்வறிக்கை கேட்டுக் கொண்டுள்ளது.



முதுபெரும் தந்தை 2ம் தவாத்ரோஸ் அவர்களைச் சந்தித்த பின்னர், அச்சபையின் தூய பேதுரு ஆலயத்தில், கிறிஸ்தவ ஒன்றிப்பு செபமும் நடைபெற்றது. இச்செபத்தின் இறுதியில், கடந்த டிசம்பரிலும், மூன்று வாரங்களுக்கு முன்னும், தற்கொலை வெடிகுண்டு தாக்குதல்களுக்குப் பலியானவர்களுக்காக, இவ்விரு கிறிஸ்தவத் தலைவர்களும் செபித்தனர். எகிப்து காப்டிக் கிறிஸ்தவர்களின் துன்பங்கள், எங்கள் துன்பங்களாகவும் உள்ளன என்றார் திருத்தந்தை பிரான்சிஸ். முதுபெரும் தந்தை 2ம் தவாத்ரோஸ் அவர்கள், காப்டிக் கிறிஸ்தவ சபையின் 118வது திருத்தந்தை. ஏறக்குறைய கி.பி.42 ம் ஆண்டில், நற்செய்தியாளர் புனித மாற்கு அவர்களால் இச்சபை உருவாக்கப்பட்டது. 451ம் ஆண்டில் இடம்பெற்ற கால்சிதோன் பொதுச்சங்கத்தில், கிறிஸ்து இயல் பற்றி ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால், இச்சபை பிரிந்தது.

**ஐ.நா.வில் பாத்திமா அன்னை மரியா திருவுருவம்:** போர்த்துக்கல் நாட்டு பாத்திமாவில் அன்னை மரியா காட்சி கொடுத்ததன் நூறாம் ஆண்டு இம்மாதம் 13ம் தேதி சிறப்பிக்கப்படும் வேளை, இந்நிறைவைக் குறிக்கும் முறையில், பாத்திமா அன்னை மரியா திருவுருவம், ஐக்கிய நாடுகள் நிறுவனத்திற்குக் கொண்டு வரப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. இந்நிறைவு நாளுக்கு முந்திய நாளான மே 12 ம் தேதியன்று, பாத்திமா அன்னை மரியா திருவுருவம், ஐ.நா. நிறுவனத்திற்குக் கொண்டு வரப்படவுள்ளது. இந்நிகழ்வில் EWTN தொலைக்காட்சியின் அருளின் பெண்கள் அமைப்பின் நிறுவுனரும், தலைவருமான Johnnette Benkovic அவர்களும் கலந்துகொள்வார். பாத்திமாவின் நூற்றாண்டு மற்றும், அன்னையின் அமைதியின் செய்தி என்ற தலைப்பில், இம்மாதம் 12 ம் தேதி, முற்பகல் 11 முதல் முதல், பிற்பகல் 1 மணி வரை இந்நிகழ்வு ஐ.நா.வில் நடைபெறும் இதில், போர்த்துக்கல் நாட்டு ஐ.நா. தூதுவர், Alvaro Mendonca, திருப்பீடப் பிரதிநிதி பேராயர் பெர்னார்திதோ அவுசா உட்பட பலர் உரையாற்று வார்கள். இதற்கு முன், 1952ம் ஆண்டில், பாத்திமா அன்னை மரியா திருவுருவம், ஐ.நா. நிறுவனத்திற்கு முதன்முறையாகக் கொண்டுவரப்பட்டது. – CNA

**மனித வர்த்தகத்திற்குகெதிராய், இந்தியா பங்களாதேஷ் திருஅவைகள்:** ஆயிரக்கணக்கான பெண் களும், சிறாரும், பங்களாதேஷ் நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வர்த்தகம் செய்யப்படுவதாக அறிக்கைகள் வெளிவந்துள்ள வேளை, இவ்விரு நாடுகளின் கத்தோலிக்கத் திருஅவைப் பணியாளர்கள் இணைந்து மனித வர்த்தகத்திற்கெதிராய் உழைப்பதற்குத் தீர்மானித்துள்ளனர். பங்களாதேஷ் காரித்தாஸ் நிறுவனமும், டெல்லி உயர்மறைமாவட்டத்தின், செத்னாலயா (Chetnalaya) சமூகநல நிறுவனமும் இணைந்து, கடந்த ஏப்ரல் இறுதியில், மூன்று நாள் கூட்டம் நடத்தி, இவ்வாறு தீர்மானித்தன. – UCAN

**வெனிசுவேலா போராட்டங்களுக்கு, ஆதரவாக அந்நாட்டு ஆயர்கள்:** வெனிசுவேலா நாட்டில் நிகழும் அநீதி களுக்கு, நற்செய்தி வழியில், மக்கள் தங்கள் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும் என்றும், எதிர்ப்பை வெளிப்படுத்தும் போராட்டம் இன்றி, நம்பிக்கை இல்லை என்றும், அந்நாட்டு ஆயர் பேரவைத் தலைவர், ஆயர் Diego Padron அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார். அந்நாட்டில் இதுவரை நிகழ்ந்துள்ள போராட்டங்கள் Caracas நகரில் மட்டுமே நிகழ்ந்து வந்துள்ளன என்றும், இம்முறையோ வெனிசுவேலாவின் பல்வேறு நகரங்களில் மக்களின் போராட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன என்றும், ஆயர் Perez Lavado அவர்கள் பீதேஸ் செய்திக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

**தென் கொரியாவில் பாத்திமா அன்னைக்கென தொடர் வழிபாடு:** பாத்திமா நகரில் அன்னை மரியா காட்சியளித்த 100 வது ஆண்டு சிறப்பிக்கப்படுவதை யொட்டி, தென் கொரியாவின் சோல் (Seaul) உயர் மறைமாவட்டத்தில், அமைதி மற்றும் நற்செய்திப் பணி இவற்றை மையப்படுத்தி, தொடர் செப வழிபாடுகள் திட்டமிடப்பட்டுள்ளதாக, UCAN செய்தி கூறுகிறது. “பாத்திமா காட்சியின் நூறாவது ஆண்டையொட்டி, செப திருப்பயணம்” என்ற தலைப்பில் சிறப்பிக்கப்படும் இம்முயற்சி, மே 13ம் தேதி துவங்கி, அக்டோபர் 13 ம் தேதியன்று Myeongdong பேராலயத்தில் நிறைவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கொரிய தீபகற்பத்தில் தற்போது நிலவிவரும் போர்ச்சூழலையும், அமைதிக்காக செபிக்கும்படி பாத்திமா அன்னை இவ்வுலகிற்கு விடுத்த அழைப்பையும் மனதில் கொண்டு, இந்த முயற்சியை மேற்கொள்ளுமாறு, இவ்வுயர் மறைமாவட்டம் அழைப்பு விடுத்துள்ளது. – UCAN

*Printed and Published* on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore,
by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.